# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 21.04.2021 | supeedsam.com | supeedsam@gmail.com







# கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாக தரமிறக்கப்பட்டது

(ஊர்காவலன்)

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரமிறக்கப்பட்டு உப பிரதேச செயலகமாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளதை ஏற்க

02 ஆம் பக்கத்தில்...




## காத்தான்குடியில் குண்டு தாக்கப்பட்ட பள்ளிவாசலை சிறுவர்கள் பார்த்தால் சஹ்ரான்கள் உருவாகும் வாய்ப்பு உள்ளது



(செங்கலடி நிருபர்)

மட்டக்களப்பு - செங்கலடி புலையவெளி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள ஏப்ரல்21 குண்டுதாக்குதலில்

02 ஆம் பக்கத்தில்...

## சம்மாந்துறை டிப்போ விவகாரம் இளைஞர்களின் போராட்டம் வென்றது



(ஐ.எல்.எம். நாசிம், நூருல் ஹுதா உமர்)

இடமாற்றம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட சம்மாந்துறையில் அமைந்துள்ள இலங்கை

02 ஆம் பக்கத்தில்...

## காத்தான்குடி பாடசாலைகள் புறக்கணிப்பு நிவர்த்திக்கப்பட வேண்டும்

### இம்ரான் மஹ்ரூப் எம்.பி

(ஹஸ்பர் ஏ ஹலீம்)

இவ்வருட அபிவிருத்தியில் காத்தான்குடிப் பாடசாலைகள் முற்றாகப் பறக்கணிப்பட்டுள்ளமை கவலையைத் தருகின்றது. இது நிவர்த்திக்கப்பட வேண்டும். இது குறித்து

02 ஆம் பக்கத்தில்...



## பாதிப்படைந்த அனைவருக்கும் நீதி கிடைக்கப்பெற வேண்டும்

### அருட்பணி ஜேயபாலன் குருஸ்



(வாஸ் கூஞ்ஞ)

நீதிக்காக குரல் கொடுக்கும் யாராக இருந்தாலும் அது ஒரு சாரருக்காக மட்டுமல்ல அனைத்து பாதிப்படைந்த

07 ஆம் பக்கத்தில்...

## கோரோனா காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வீதியோர வியாபார நிலையங்களை நிறுத்தாவிட்டால் போராட்டம்

### கல்முனை போதுச்சந்தை வர்த்தக சங்கம் எச்சரிக்கை



(பாறுக் ஷிஹான்)

கொரோனா அனர்த்த காலங்களில் தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட வீதியோர வியாபார நிலையங்கள் எதிர்வரும் காலங்களில் நிறுத்தப்பட வேண்டும்.அவ்வாறு நிறுத்த தவறும் பட்சத்தில் கல்முனை பொதுச்சந்தை மட்டுமல்லாது கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சந்தை வர்த்தகர்களும் ஒன்றிணைந்து இதற்கு எதிரான போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளதாக கல்முனை

02 ஆம் பக்கத்தில்...

## இலங்கையில் மூவரின் உயிரை பறித்தேடுத்த அஸ்ட்ரா சேனிகா தடுப்பூசி

(காந்தன்)

அஸ்ட்ரா செனிகா தடுப்பூசி பாவனை காரணமாக மூவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

கொரோனா தடுப்பூசி பாவனையால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதா?

07 ஆம் பக்கத்தில்...

## பேண்களை இலக்கு வைத்து வழிப்பறி கோள்ளை


(ராஜ்)

நாட்டின் பல பகுதிகளில் வழிப்பறி கொள்ளைகள்

02 ஆம் பக்கத்தில்...








## பெரிய நீலாவணையில் நினைவேந்தல்



(பாறுக் ஷிஹான்)

ஏப்ரல் 21 இல் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாவது வருட நினைவாக இடம்பெற்ற

02 ஆம் பக்கத்தில்...

## நாட்டில் மீண்டும் அதிகரிக்கும் கோரோனா

### சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை

(காந்தன்)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ள நிலையில், தீவிர சிகிச்சை பிரிவுகளில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார மேம்பாட்டு

07 ஆம் பக்கத்தில்...






## ஈஸ்டர் தாக்குதலின் உண்மைகளை வேளிக்கோண்டு வரும்வரை ஓயமாட்டேன்

(ஊர்காவலன்)



ஈஸ்டர்தாக்குதலின் உண்மைகளை வெளிக்கொண்டுவந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலைநாட்டப்படும் வரை எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் என்று கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டு வருட நினைவஞ்சலி நிகழ்வில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாக்குதலின் பின்னணியில் உள்ள அனைத்து உண்மைகளும் வெளிக்கொண்டுவரப்படுவதில் இருந்தே, உயிரிழந்தவர்களுக்கும்

07 ஆம் பக்கத்தில்...











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கப்போடி அறக்கட்டளை
REG.NO : TR/I/71
MANIKKAPODY TRUST
MUNAIKKADU, KOKKADDICHOLAI
முடிந்ததைச் செய்வோம்
முடிந்தவரை செய்வோம்

## பெண்களை இலக்கு வைத்து வழிப்பறி கொள்ளை

அதிகரித்துள்ளதால் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு, பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக வீதிகளில் தனியாக பயணிக்கும் பெண்களை வழி மறித்து தங்க சங்கிலிகளை பறிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 24 மணி நேரத்தில் யக்கல, வெல்லாவ, வலஸ்முல்ல மற்றும் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இது போன்ற சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இவ்வாறான குற்றச் செயல்களில் இரண்டு நபர்கள் இணைந்து மோட்டார் சைக்கிள்களின் உதவியுடன் ஈடுபட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த மூன்று வாரங்களில் சங்கிலி திருட்டு சம்பவங்களில் ஈடுபட்ட 13 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## கொரோனா காலத்தில் ஏற்படுத்தப்பட்ட வீதியோர வியாபார நிலையங்களை

பொதுச்சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எல்.கபீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச் சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்து பேசிய அவர்;

கொரோனா அனர்த்த தடுப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் சிறப்பாக முன்னெடுத்துள்ளது.அதற்கு ஆதரவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் ஜி.சுகுணனும் எம்முடன் தொடர்பு கொண்டு அடிக்கடி கொரோனா அனர்த்தம் தொடர்பில் பல கருத்தரங்குகளையும் நடாத்தியுள்ளார்கள். கொரோனா அனர்த்தம் ஆரம்பம் முதல் இன்று வரை இந்த பொதுச் சந்தையினுள் கொரோனா நோய் தாக்கிவிடக்கூடாது என்பதில் மிக கவனமாக செயற்பட்டிருந்தோம்.

தற்போது 3 ஆவது அலையாக எம்மை தாக்க முயற்சிக்கின்ற கொரோனா அனர்த்தத்தை நாம் முகம் கொடுக்கின்ற நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றோம்.அந்த வகையில் எமது தொடர்ச்சியான சுகாதார வழிமுறைகள் நாளுக்கு நாள் நாங்கள் மீண்டும் மீண்டும் பல யுத்திகளை பயன்படுத்திகை ஒலிபெருக்கி மூலம் தொடர்ச்சியாக வர்த்தகர்களுக்கும் இங்கு பொருட்களை கொள்வனவு செய்ய வருகை தரும் நுகர்வோருக்கும் பல அறிவுறுத்தல்களை கொடுத்து கொண்டு இருக்கின்றோம்.

இன்று வரை எமது சந்தையை அண்டிய கடைகளில் சுகாதார நடைமுறைகள் பேணப்படுகின்றது.கைகழுவுதல் உள்ளிட்ட செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்தி கொண்டிருக்கின்றோம்.இங்கு மிக வேதனையாக விடயம் யாதெனில் கடந்த கொரோனா இரண்டாம் அலையின் போது எமது சந்தை ஒரு மாதமாக மூடப்பட்டிருந்த வேளை எமது வர்த்தகர்கள் எதுவித வாழ்வாதரம் அற்றவர்களாக காணப்பட்டனர்.இது தொடர்பில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்காக பல தரப்பினருடன் கலந்துரையாடிய வேளை சிலரின் உதவியுடன் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு எமது சங்கத்தினரால் நன்கொடை உதவி மேற்கொள்ள முடிந்தது.தற்போது கூட எமது சந்தையின் வியாபாரம் கூட குறைவடைந்து காணப்படுகின்றது என்பதை சுட்டி காட்ட விரும்புகின்றேன்.கொரோனாவினால் எமது சந்தை ஒரு மாதகாலமாக மூடப்பட்டிருந்த நிலையில் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளிலும் வீதியோரங்களிலும் தற்காலிக விற்பனை நிலையங்கள் உருவாக்கப்பட்டிருந்தன.

இருந்த போதிலும் இதனால் தற்போது பாரிய விபத்துக்களும் சன நெரிசலும் ஏற்பட்டு வீதி போக்குவரத்து பிரச்சினை எழுந்துள்ளது.ஆகவே இந்த விடயத்தில் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட அனைத்து வீதியோர வியாபார நடவடிக்கைகளும் நிறுத்த வேண்டும்.அது மட்டுமல்லாது பொருட்களை வாகனங்களில் எடுத்து சென்று ஊர்களுக்கு சென்று வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு சுகாதார நடவடிக்கைக்கு கேடாக நடக்கின்ற வியாபாரங்கள் உடனடியாக நிறுத்தப்பட கல்முனை மாநகர முதல்வர் கல்முனை பிராந்திய சேவை பணிப்பாளர் எமக்கு உதவ முன்வர வேண்டும். அவர்கள் எமது வாழ்வாதாரத்தை கருத்தில் கொள்ள வேண்டும்.ஏனெனில் கௌரவமாக வாழ்ந்த எமது வர்த்தகர்கள் நாளுக்கு நாள் கடனாளியாக தள்ளப்பட்டுள்ளனர்.

ஏனெனில் நாம் சந்தையில் இருந்து மாநகர சபைக்கு வரிகளை செலுத்தி கொண்டு நாங்கள் வருமானம் அற்ற நிலையில் இருக்கின்றோம்.எனவே கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சந்தை வியாபாரம் முன்னெற வீதியோர வியாபார நடவடிக்கைகளை கல்முனை மாநகர முதல்வர் ஆணையாளர் சுகாதார சேவை பணிப்பாளர் பொலிஸார் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.இது தொடர்பில் கல்முனை ஆணையாளரிடம் பல தடவை கூறி இருந்தும் எதுவித பலனும் இன்றி வேதனை நிலைமையில் தள்ளப்பட்டுள்ளோம்.

எனவே எதிர்வரும் காலங்களில் வீதியோர வியாபாரங்கள் கல்முனை மாநகர சபை எல்லைக்குள் நிறுத்தப்பட வேண்டும்.அவ்வாறு நிறுத்த தவறும் பட்சத்தில் கல்முனை பொதுச்சந்தை மட்டுமல்லாது கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து சந்தை வர்த்தகர்களும் ஒன்றிணைந்து இதற்கு எதிரான போராட்டம் ஒன்றினை முன்னெடுப்பதற்கு தீர்மானிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பெரிய நீலாவணையில் நினைவேந்தல்

ஒன்றிணைந்த பிரார்த்தனை மற்றும் நினைவேந்தல் நிகழ்வு அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பகுதியில் நேற்று(21) மாலை நடைபெற்றது.

பெரிய நீலாவணை பொதுமக்கள் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒன்றிணைந்த பிரார்த்தனை மற்றும் நினைவேந்தல் நிகழ்வில் பெரியநீலாவணை கிறிஸ்தவ சபை போதகர் ஜெ.லியாஸ்கர் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மத அனுஸ்டானங்களுடன் மனிதநேயமற்ற செயற்பாடுகள் தொடர்பிலும் கருத்துக்கள் போதகரினால் முன்வைக்கப்பட்டன.

மேலும் நமது நாட்டில் இதுபோன்ற துரதிஸ்ட சம்பவங்கள் இடம்பெறாது பாதுகாக்க அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டிய பிரார்த்தனைகள் நடைபெற்றதுடன் மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வுகளில் சர்வமத தலைவர்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

COLOMBO SHIPPING SOLUTIONS (PVT) LTD.
Galle Road, Colombo – 06, Sri Lanka.
Tel : +94 112 555 567
Whatsapp: +94 77 1766769
E-mail - ops@colomboshipping.com
web - www.colomboshipping.com



We provides a comprehensive range of shipping, logistics and marine services. With office in Colombo, Galle, Hambantota and Trincomalee, we cover all ports in the country, and handle any type of vessels and cargoes.

Services include:
Ship Agency Operations, Marine Services, Ship supplies, Total Project Logistics, Offshore Support Services, Crew Manning Services and Private Maritime Security Services.



## காத்தான்குடி பாடசாலைகள் புறக்கணிப்பு நிவர்த்திக்கப்பட வேண்டும்

கிழக்கு மாகாண ஆளுநர் கவனம் செலுத்த வேண்டும் என திருகோணமலை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை விடுத்துள்ளார். இவ்வருட பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் எல்லாப் பிரதேசங்களில் இருந்தும் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் காத்தான்குடி பிரதேசத்திலிருந்து எந்தவொரு பாடசாலையும் தெரிவு செய்யப்படவில்லை என்ற தகவலை அங்குள்ள சில பிரமுகர்கள் எனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்கள்.

காத்தான்குடிக்கு தலைமைத்துவம் இல்லாததால் இந்தப் புறக்கணிப்பு ஏற்பட்டதா என்ற சந்தேகம் வெளியிட்டிருக்கும் அவர்கள் இது தொடர்பாக சமுகவலைத்தளங்களில் வெளிவந்துள்ள சில பதிவுகளையும் எனக்கு அனுப்பியுள்ளார்கள்.

ஐக்கிய மக்கள் சக்த்தியின் கிழக்கு மாகாண எம்.பி என்ற வகையில் இந்த விடயத்தை உரிய தரப்புக்கு எத்திவைத்து காத்தான்குடிக்கு நிவாரணம் பெற்றுத்தருமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் எல்லாப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் இவ்வருட அபிவிருத்திக்காக பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் காத்தான்குடி பிரதேச பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டமைக்கான காரணம் என்ன என்ற சந்தேகம் எழுவது இயல்பானது தான். இவ்வாறு ஒரு குறித்த பிரதேசத்தை மட்டும் புறக்கணித்துள்ளமை குறித்து நான் கவலை அடைகின்றேன். இது அரசாங்கத்தின் திட்டமிட்ட சதி என்று சிலர் குறிப்பிட்டாலும் இது எங்கோ ஏற்பட்ட தவறு என்றே நான் கருதுகின்றேன்.

எனவே, இந்த விடயம் குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் கவனம் செலுத்த வேண்டும். தவறு எங்கே உள்ளது என்பதை இனங்கண்டு அதனைத் திருத்தி காத்தான்குடிப் பாடசாலைகளையும் இவ்வருட அபிவிருத்தியில் உள்வாங்க நவடிக்கை எடுக்க வேண்டும் என இம்ரான் எம்.பி கேட்டுள்ளார்.

## சம்மாந்துறை டிப்போ விவகாரம் இளைஞர்களின் போராட்டம் வென்றது

போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போ அவ்விடத்திலையே நிரந்தரமாக இருக்கச் செய்ய பல கட்ட நடவடிக்கைகள் பலதரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்தும் அவை வெற்றியளிக்காமையால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போவை குறித்த இடத்திலேயே நிரந்தரமாக வைக்க நடவடிக்கை எடுக்க கோரி சம்மாந்துறை இளைஞர்கள் கடந்த சில தினங்களுக்கு முன் அந்த சாலைக்கு அண்மையில் திரண்டு 9 நாட்களாக சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அதன் பிற்பாடு இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் அடங்கிய குழு இப் பேருந்து சாலை தொடர்பாக திருகோணமலையில் அமைந்துள்ள தனியார் விடுதி ஒன்றில் கடந்த 14ம் திகதி போக்குவரத்து துறை அமைச்சர் காமினி லொக்குகே அவர்களை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் கூடிய விரைவில் சாதகமான முடிவை பொற்றுதருவதாக அன்று வாக்குறுதி அளித்தார் போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே. அவரின் வேண்டுகோளுக்கிணங்க சம்மாந்துறை இளைஞர்களின் ஆர்ப்பாட்டம் கடந்த 14 ம் திகதி கைவிடப்பட்டது. அதன் அடுத்தகட்டமாக நேற்று அமைச்சரை சந்தித்து பேசிய இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் தலைமையிலான சமூக செயற்பாட்டாளர்கள் குழுவினர் சம்மாந்துறை பஸ் நிலையம் தொடர்பாக போக்குவரத்து அமைச்சருக்கு எடுத்துரைத்து உடனடியாக தீர்வை பெற்றுத்தர கோரிக்கை முன்வைத்தனர்.

உடனடியாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவிடம் இது தொடர்பில் கலந்துரையாடி ஆலோசனை செய்த அமைச்சர் காமினி லொக்குகே அவர்கள் இலங்கை போக்குவரத்து சபை தலைவருக்கு உடனடியாக இவ்விடயத்தை செய்து முடிக்குமாறும். சம்மாந்துறை டிப்போவை அங்கையே நிரந்தரமான இடத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் பணிப்புரை விடுத்ததாக அமைச்சரை இன்று காலை சந்தித்த பின்னர் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் அமீர் அப்னான் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

## காத்தான்குடியில் குண்டு தாக்கப்பட்ட பள்ளிவாசலை சிறுவர்கள்

உயிரிழந்தவர்களுக்கான நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. மட்டக்களப்பு முற்போக்குத்தமிழர் அமைப்பபின் ஏற்பாட்டியில் குறித்த அஞ்சலி நிகழ்வு நேற்று மாலை 05.30 மணியளவில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் உறவுகள், மதகுருமார், முற்போக்கு அமைப்பின் உறுப்பினர்கள் பொது மக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர்.

மாலை 6 மணியளவில் நினைவுத்தூபியில் தீச்சுடர் ஏற்றி, மலர் அஞ்சலியுடன் 2நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்;

கடந்த கால அரசாங்கத்திலே இந்த குண்டு வெடிப்பு நடப்பது தொடர்பாக ஏற்கனவே சொல்லப்பட்டது. சில அரசியல் வாதிகளுக்கு தெரிந்திருந்தது. சில அரசியல்வாதிகளின் பாதுகாவலர்களுக்கு தெரிந்திருந்தது. அவர்கள் வெளிப்படுத்தவில்லை.

அவர்கள் தங்களை பாதுகாத்துக்கொண்டார்கள் கடந்த அரசாங்கத்தை நடாத்திய தற்போதைய எதிர்க்கட்சியினர்.

சஹறான் என்பவர் திடீர் என உருவாகியவர் அல்ல. ஒருசில மதத் தலைவர்களும் ஒரு சில அரசியல் தலைவர்களுடைய உணர்ச்சியூட்டக்கூடிய பேச்சுக்கள். ஒரு இனத்திற்கு எதிராக ஒரு மதத்திற்கு எதிராக சமூகத்திற்கு எதிராக வன்முறையை தூண்டக்கூடிய பேச்சுக்கள் நடவடிக்கைகதான்.

ஐ.எஸ்.எஸ் பயங்கரவாதிகளின் அடிப்படை நோக்கமே ஒரு இஸ்லாமிய அரசை உருவாக்குவது.

90களிலே காத்தான்குடியில் இடம்பெற்ற ஒருசம்பவத்திலே குண்டு தாக்கப்பட்ட பள்ளிவாசல் இன்னமும் புனரமைக்கப்படாமல் உள்ளது. அந்த இடத்திற்கு செல்லுகின்ற சிறுவர்கள் இளைஞர்கள் அவற்றைப்பார்க்கும் போது இன்னமும் உணர்வு தூண்டப்பட்டு வண்முறையாளர்களாகத்தான் மாறுவார்கள் இன்னமும் சஹறான்கள் உறுவாகுவாக வாய்ப்புகள் உள்ளது.

இதனால் அப்பாவிகள் மாட்டிக்கொள்கிறார்கள். அப்பாவிக் குடும்பங்கள் பாதிக்கப்படுகிறது.

சில மதத்தலைவர்களுடைய பேச்சுக்கள் ஒரு இனத்தை உணர்ச்சியூட்டி இன்னொரு இனத்திற்கு எதிராக தற்கொலை குண்டுதாரியாக மாறுமளவிற்கு கொண்டுசெல்கிறது.

பாராளுமன்றத்தில் சில அரசியல் தலைவர்கள் பேசிய பேச்சுக்களும் இதற்கு காரணமாக அமைந்துள்ளது. வடகிழக்கு இணைத்தால் இரத்த ஆறு ஓடும் இது ஒரு தனி தாயகம் என்றெல்லாம் பேசினார்கள். இவ்வாறான பேச்சுதான் வளர்ந்துவரும் சமூதாயத்திற்கு ஒரு உணர்வை ஊட்டி அது இன்னுமொரு சமூகத்திற்கு எதிராக மாறுகிறது.

## கல்முனை தமிழ் பிரதேச செயலகம் உப பிரதேச செயலகமாக

முடியாதென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு தொடர்ந்து பேசிய அவர்;

கல்முனைதமிழ் பிரதேசசெயலகத்தை உப பிரதேச செயலகமாக தரமிறக்குமாறு அம்பாறை மாவட்ட அரச அதிபருக்கு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் ஏப்ரல் 8 ஆம் திகதியிடப்பட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 28 வருடங்களாக கல்முனை தமிழ் பிரதேச செயலகமாக இது செயற்பட்டு வருகின்றது. இங்கு 39,000 க்கு மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள் .இவர்களில் 3000 வரையிலான முஸ்லிம்களும் 104 சிங்களவர்களும் உள்ளனர். வாக்காளர்களாக 22,500க்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர்.

பிறப்பு,இறப்பு,விவாகப்பதிவாளர் அலுவலகம், காணி அலுவலகம் என்பவற்றினால் இது ஒரு தனி பிரதேச செயலகமாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கென தனியாக நிதி ஒதுக்கீடுகளும் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான நிலையில் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தில் மட்டும் ஏன் பாரபட்சம் காட்டுகின்றீர்கள்?தமிழ் மக்களை உள்ளடக்கிய பிரதேச செயலகமாக இருப்பதுதான் காரணமா?

கல்முனை தமிழ் பிரதேச செயலகம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தரமிறக்கப்பட்ட விடயத்தை அவசர நிலையாக கருதி இதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்விடயம் தனியாக கையாளப்பட வேண்டும்.கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை தனி பிரதேச செயலகமாக செயற்பட அனுமதிக்க வேண்டும் .

இவ்விடயம் தொடர்பில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லுமாறு இங்குள்ள அரச தரப்பினரைக் கோருகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

Prasath Coiffeur
Öffnungszeiten
Mo -Fr 10.00-19.00
Sa 09.00-18.00
Heinrichstrasse 120, 8005 Zürich.
NAT:076 565 64 57

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் இடம்பெற்ற விசேட அஞ்சலி நிகழ்வு




(ரக்ஸனா)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று நேற்று புதன்கிழமையுடன் இரண்டு வருடம் நிறைவு பெற்றுள்ளதை முன்னிட்டு குறித்த தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து நாடளாவிய ரீதியில் விசேட பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி மட்டக்களப்பிலும் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து விசேட அஞ்சலி மற்றும் பிரார்த்தனைகள் நேற்று புதன்கிழமை நடத்தப்பட்டுள்ளன.

குண்டுத்தாக்குதலுக்கு இலக்கான மட்டக்களப்பு சியோன் தேவாலயத்திலேயே இந்த விசேட அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதில் சியோன் தேவாலயத்தில் நடந்த குண்டுத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர் மற்றும் அதில் காயமடைந்தவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி கொழும்பின் பிரபல விடுதிகளிலும், தேவாலயங்கள் மீதும் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் இந்த கொடூர சம்பவத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் சிறுவர்கள், பெரியவர்கள் உட்பட 32 உயிரிழந்தம், 80 மேற்பட்டவர்கள் படுகாயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# மன்னார் வேதசாட்சிகளின் ஆலயத்திலும் உயிர்த்த ஞாயிறு நினைவு தினம் நினைவுகூரல்



(வாஸ் கூஞ்ஞ)

உயிர்த்த ஞாயிறு அன்று ஆலயங்களிலும் ஏனைய ஓரிரு இடங்களிலும் நாட்டில் இடம்பெற்ற மிலேசத்தனமான தற்கொலை குண்டுத்தாக்குதலில் உயிர் நீத்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் நேற்று புதன்கிழமை மன்னாரிலும் நினைவுகூரப்பட்டது.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மரியதாஸ் மிக்கேல் என்பவரும் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி இறந்திருந்தார்.

ஆகவே இவ் மறைமாவட்டத்தில் உயிர்நீத்த இவரின் ஆன்ம சாந்திக்காகவும் இவ் தினத்தையும் இதில் உயிர் இழந்த அனைவரையும் நினைவுகூர்ந்து மன்னார் மறைமாவட்டத்தின் புனித தளங்களில் ஒன்றான வேதசாட்சிகளின் இராக்கினி தேவாலாயத்தில் சோக மணி ஒலிக்கப்பட்டதுடன் இவ் ஆலய பங்குதந்தை அருட்பணி அலெக்சாண்டர் பெனோ அடிகளாரின் ஏற்பாட்டில் மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினரின் இயக்குனர் அருட்பணி எஸ்.எமிலியானுஸ் பிள்ளை அடிகளார் தலைமையில் மன்னார் மறைமாவட்ட மனிதஉரிமை ஆனைக்குழு இயக்குனர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் மற்றும் ஏழை மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்திவரும் அருட்பணி எட்வின் அடிகளார்கள் இணைந்து இவ் நினைவு கூட்டுத்திருப்பலியை ஒப்பக் கொடுத்தனர்.



கொரோனா தொற்றுநோய் காரணமாக சுகாதார நடைமுறைகளை பின்பற்றியவாறு மட்டுப்படுத்தப்பட்ட முறையில் இவ் மத வழிபாட்டில் பக்தர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் 80 ஆயிரம் ஹெக்டயர் நிலப்பரப்பில் சிறுபோக வேளாண்மை

(ஏ.எல். எம்.ஷினாஸ்)



அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 80 ஆயிரம் ஹெக்டயர் விவசாய நிலப்பரப்பில் சிறுபோக வேளாண்மை செய்கை இடம்பெறவுள்ளதாக மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள டீ.எஸ். சேனநாயக்க சமுத்திரம் மற்றும் ஏனைய நீர்தாங்கு நிலைகளின் விவசாயிகளுக்கு தேவையான நீர் காணப்படுவதுடன் மாவட்டத்திலுள்ள சகல விவசாயக் காணிகளிலும் நெற்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அக்கரைப்பற்று, ஒலுவில், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நிந்தவூர், நாவிதன்வெளி போன்ற பிரதேசங்களில் தற்போது விவசாயிகள் விதைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

விவசாயிகளுக்கு தேவையான அனைத்து ஆலோசனைகளும் விவசாய திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் மே மாத இறுதிக்குள் விதைப்பு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு கொரோணா தொற்று நோய்க்கு மத்தியிலும் விவசாயிகள் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசாங்கம் செய்து கொடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# ‘இளைஞர்களின் பிரச்சனைகளும் எதிர்காலமும்’ திருமலையில் இடம்பெற்ற செயலமர்வு



(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் விளையாட்டுத்துறையை இளைஞர்கள் நலன் கருதி ஊக்கப்படுத்த வேண்டும் என இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

திருகோணமலையில் நடைபெற்ற இளைஞர்களின் பிரச்சனைகளும் எதிர்காலமும் எனும் தொனிப்பொருளில் செயலமர்வு நடைபெற்றது.

இங்கு இளைஞர்கள், மத துறவிகள், மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் துறைசார்ந்த அதிகாரிகள் சிவில் சமூக பிரதிநிதிகள் என தேர்தெடுக்கப்பட்ட 20 பேர் கலந்து கொண்டனர்.

இங்கு பல்வேறு தலைப்புகளில் இளைஞர்கள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டது. இங்கு பங்கு கொண்ட இளைஞர் கள் எம்மை பொறுத்தவரை விளையாட்டுதுறை ஒரு முக்கியமானதுறையாகும். திருகோணமலை யில் ஒரு மைதாம் கூட முறையாக இல்லாமல் உள்ளது.

மெய்கெய்சர் விளையாட்டு அரங்கு புனரமைப்பு பணி நிறுத்தப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. இவ்வாறான விடயங்கள் இளைஞர்களின் ஆளுமை வெளிப்பட்டிற்கு பிரதானமானதாகும் எனவும் பங்கு கொண்ட இளைஞர் கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு இளைஞர் சேவைகள் உதவி மாவட்டப்பணிப்பாளர் எஸ். ரவிச்சந்திரன், அரசார அமைப்புக்களுக்கான மாவட்ட செயலக இணைப்பதிகாரி கே. விமலகாந்தன், சிவில் சமூக ஒன்றியத்தின் தலைவர் டாக்டர். ரவிச்சந்திரன் உள்ளிட் பல உயரதிகாரிகள். ஓய்வு நிலை அதிகாரிகளும் கலந்து கொண்டனர்

# பாட்டாளிபுரம் கிராமத்தில் நடைபெற்ற ‘அரச சேவைகள் மக்களின் காலடியில்’




(பொன்ஆனந்தம்)

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாட்டாளிபுரம் கிராமத்தில் அரச சேவைகளை மக்களின் காலடிக்கு எனும் தலைப்பில் சேவை ஒன்று பாட்டாளிபுரத்தில் நடைபெற்றது.

இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் ஆதரவுடன் நடைபெற்ற இந்நிகழ்வு பிரதேச செயலாளர் எம். முபாரக் தலைமையில் நடைபெற்றது.

பல்வேறு துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு தமது சேவைகள் தொடர்பாக தெளிவு தெளிவுபடுத்தியதுடன் பலசேவைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பல அடிப்படை ஆவணங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டதுடன் சமூர்த்தி உள்ளிட்ட உதவிகள் தொடர்பான விடயங்களும் மக்களுக்கு வழங்கப்பட்டன.







# யாழ்ப்பாணத்தில் 3 நூல்கள் வெளியீடு

எஸ்.ரி.ரி.எஸ் பதிப்பகத்தின் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பதிப்பகத்தின் இயக்குநர் எஸ்.ரி.திலக்ஸன் தலைமையில் சங்கானை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் சபா குகதாஸ், வலிமேற்கு பிரதேசசபை தவிசாளர் தருமலிங்கம் நடனேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இந் நூல் வெளியீட்டில் எஸ்.ரி.திஸ்னுகனின் தேடல் ஆர்.சரணிகாவின் நாளைய நான் எஸ்.ரி.அருள்குமரனின் சோலர் ஆகிய நூல்கள் வெளியீடு செய்யப்படவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையின மக்களுக்கு அநீதி இழைக்காத வகையில் எல்லை நிர்ணயம் இடம்பெற வேண்டும்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி தெரிவிப்பு



(க.கிஷாந்தன்)

மாகாண சபைகளுக்கான தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும். அதேபோல சிறுபான்மையின மக்களுக்கு அநீதி இழைக்காத வகையில் எல்லை நிர்ணயம் இடம்பெறவேண்டும். அதனை மையப்படுத்திய பொதுவானதொரு கலந்துரையாடலுக்கு எமது கட்சி தயார் - என்று புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் தேசிய அமைப்பாளர் மகேந்திரன் தெரிவித்தார்.

நுவரெலியா, இராகலையில்நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கொழும்பு துறைமுக நகரம், மாகாணசபைத் தேர்தல் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இவை தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

சீனாவின் கொழும்பு துறைமுக நகர திட்டத்துக்கு ஆரம்பம் முதலே நாம் எதிர்ப்பை வெளியிட்டோம். இத்திட்டமானது இந்நாட்டின் இறைமைக்கும், அரசியல் இருப்புக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. மறுபுறத்தில் நாட்டின் கடல் வளத்துக்கும், சுற்றாடலுக்கும் ஆபத்தாகமே அமையும். இந்நிலையில் இதனை உறுதிப்படுத்தும் விதமாகவே பிரதமரால் புதிய சட்டமூலமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் ஆணைக்குழுவொன்றின் ஊடாகவே அப்பகுதி நிர்வகிக்கப்படும். இதன்மூலம் சீனாவின் தேவை நிறைவேற்றப்படும். எனவே, இச்சட்டமூலத்தை அரசு மீளப்பெற வேண்டும். துறைமுக நகர்ப்பகுதியை நாட்டு எல்லைக்குள் உள்வாங்க வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான குறைந்தபட்ச ஓர் அரசியல் தீர்வாக மாகாணசபை முறைமை காணப்படுகின்றது. அதற்கும் பேரினவாதிகள் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர். எனவே, தேர்தல் பிற்போடப்படுவது கண்டிக்கதக்கதொன்றாகும். ஆகவே, ஜனநாயகம் நிலைநாட்டப்படவேண்டுமானால் உடனடியாக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

எல்லை நிர்ணயம் என்பது கடந்த காலங்களில் பேரினவாத நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்பட்டது. கடந்த உள்ளாட்சி சபைத் தேர்தலின்போதும் அவ்வாறே நடைபெற்றது. சிறுபான்மையின் கட்சிகளுக்கு கிடைக்கக்கூடிய பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதே இதன் நோக்கம். எனவே, சிறுபான்மையினத்தவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலுயே எல்லை மீள் நிர்ணயம் செய்யப்படவேண்டும். அதனை மையப்படுத்திய பொதுக்கருத்தடாலுக்கு நாம் தயார். - என்றார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கந்தளாயில் விசேட ஆராதனை

(எப்.முபாரக்)



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் இரண்டாவது வருடம் பூர்த்தியாகும் நிலையில் அத்தாக்குதலில் பலியான மக்களை நினைவு கூர்ந்து அதற்கான விஷேட பிரார்த்தனை நேற்று புதன்கிழமை திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்றது.

2019ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 21ஆம் திகதி கொழும்பின் பிரபல விடுதிகளிலும் தேவாலயங்கள் மீதும் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த தாக்குதலில் பலியான மக்களை நினைவுகூர்ந்து இறந்தவர்களின் ஆத்மா சாந்திக்காகவும் வேண்டி திருகோணமலை கந்தளாய் தேவாலயத்தில் மெழுகுவர்த்தி ஏற்றி விஷேட வழிபாடு நடத்தப்பட்டுள்ளது.

குறைந்தளவிலான மக்கள் இதில் கலந்து கொண்டதோடு இதன்போது தேவாலயத்தில் பலத்த பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



## சீரான பஸ் போக்குவரத்தை வழங்க வேண்டும் என கோரி நுவரெலியாவில் போராட்டம்

க.கிஷாந்தன்

நுவரெலியா - இராகலை புரூக்சைட் சந்தியிலிருந்து கோணப்பிட்டி வழியாக குட்வூட் வரை, சீரான பஸ் போக்குவரத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி, புரூக்சைட் சந்தியில் நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வலப்பனை மற்றும் ஹங்குராங்கெத்த கோட்ட கல்வி வலயத்துக்கு உட்பட்ட 15 பாடசாலைகளில் பணியாற்றும் 60க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், இந்தக் கவனஈர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சில்வர்கண்டி, மாகுடுகலை, ஹய்பொரஸ்ட் (மூன்று பிரிவுகள்), ரில்லாமுல்ல, அல்மா, பாரதி, மெரிகோல்ட், கோணக்கலை, கோணப்பிட்டிய, குட்வூட், எலமுல்ல, கபரகலை ஆகிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர் சமூகத்தினரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்குறித்த 15க்கும் மேற்பட்ட பாடசாலைகளில் சில்வர்கண்டி பாடசாலையைத் தவிர்ந்த ஏனைய 14 பாடசாலைகளுக்கும் செல்ல புரூக்சைட் சந்தியிலிருந்து நான்கு கிலோமீற்றர் தொடக்கம் 30 கிலோமீற்றர் வரை பஸ் பயணத்தை இந்த ஆசிரியர் சமூகத்தினர் தினமும் மேற்கொள்கின்றனர்.

இப்பாடசாலைகளில் சுமார் 4,800 மாணவர்கள் கல்வி கற்கும் நிலையில் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இந்த 60க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பொறுப்பாளிகளாகக் காணப்படுகின்றனர்.

இவர்கள் அனைவரும் நுவரெலியா, ஊவா மாகாணம், வலப்பனை ஆகிய பகுதிகளிலிருந்தே புரூக்சைட் சந்திக்கு காலை 6.45 மணியளவில் வருகை தந்து அங்கிருந்தே 4-30 கிலோமீற்றர் தூரங்களில் உள்ள பாடசாலைகளுக்கு தினமும் செல்ல வேண்டியுள்ளது.

இராகலை நகரில் இருந்து கோனப்பிட்டிய வழியாக குட்வூட் பகுதிக்கு காலை 6.30 மணிக்குப் புறப்படும் நுவரெலியா டிப்போவுக்குறிய அரசாங்க பஸ்சேவையை நம்பியே இவர்கள் பயணிக்கின்றனர். இந்நிலையில் ஏழு வருடங்களாக சேவையில் ஈடுபடுத்தப்படும் இந்த பஸ்,

கடந்த சில மாதங்களாக சேவையில் ஈடுபடுவதற்கு தடையற்பட்டுள்ளதால், போக்குவரத்து சிக்கலுக்கு தாம் முகம்கொடுத்து வருவதாகவும் இதனைக் கருத்திற்கொண்டே தாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

## இரத்ததான நிகழ்வு





(ரக்ஸனா)

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிர்த்தவர்களின் ஞாபகார்த்தமாக நேற்று புதன்கிழமை மட்டக்களப்பில் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின மட்டக்களப்பு கிளை, சீரி, கரிதா அறக்கட்டளை, தேசி இளைஞர் சேவை மன்றம், உள்ளிட்ட பொது அமைப்புக்களின் ஒத்துழைப்புடன், மட்டக்களப்பு தாண்டவன்வெளி மாதா கோயிலில் அமைந்துள்ள பெடினன்ஸ் மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஆரம்பத்தில் இரத்த நன்கொடையாளர்கள் அனைவரும், மெழுகுவர்த்தி ஏந்தி மௌன அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து இரத்த தான நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று புதன்கிழமை அன்று உதிரம் சிந்தி உயிர் நீத்த எம் உறவுகளின் இரண்டு ஆண்டு நினைவாக எங்கள் உதிரம் கொடுத்து அஞ்சலி செலுத்துவோம் எனும் கருத்தின் கீழ் இதன்போது பல இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். இதன்போது மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கிப் பிரிவு இரத்த நன்கொடைகளைப் பெற்றுக் கொண்டது.



## வாழைச்சேனையில் ஈஸ்டர் தாக்குதல் நினைவுகூரல்

(நடேசன் குகதர்ஷன் )

ஈஸ்டர் தாக்குதல் நடைபெற்று இரண்டு வருடங்கள் நிறைவு பெறுகின்ற நிலையில் ஈஸ்டர் தாக்குதலில் உயிர்நீர்த்தவர்களை நினைவுகூரும் நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது

அந்தவகையில் வாழைச்சேனை பிரதேசசபையின் ஏற்பாட்டில் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக பிரார்த்தனைகள் முன்னெடுக்கப்பட்டது.

பிரதேச சபை தவிசாளர் திருமதி.ஸோபா ஜெயரஞ்சித் தலைமையில் ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பிரதேச சபை உறுப்பினர்கள், சபை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

## மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தில் விழிப்புணர்வு செயலமர்வு





(ஹஸ்பர் ஏ ஹலீம்)

இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய காரியாலயத்தினால் விழிப்புணர்வு செயலமர்வொன்று இடம் பெற்றது.

குறித்த செயலமர்வானது நேற்று புதன்கிழமை தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயளாளர் ஜெ.ஸ்ரீபதி அவர்களின் நெறிப்படுத்தலில் இடம் பெற்ற இதில் வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள்,கடன் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான பல விடயங்களை இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிராந்திய காரியாலய முகாமையாளர் ஏ.மைக்கல் நிரோசன் அவர்கள் தெளிவுபடுத்தினார். இதில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப் மற்றும் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

## திருகோணமலை மாவட்ட செயலகத்தின் சிங்கள தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம்

(எப்.முபாரக்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிங்கள தமிழ் புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் இரண்டாம் திகதி திருகோணமலை பிரதான பீச் பிரதேசத்தில் நடைபெற உள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவின் வழிகாட்டுதலின் படி நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பல போட்டிகளும் நடைபெறவுள்ளன.

ஆண்,பெண் இரு பாலாரிற்குமான சைக்கிள் ஓட்டம்,மரதன் ஆகிய போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளோர் தமது பிரதேச செயலகத்தில் அல்லது மாவட்ட செயலகத்தில் உரிய விண்ணப்ப படிவங்களைப்பெற்று பூர்த்தி செய்து இம்மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்ப படிவங்களை கையளிக்க வேண்டும்.

அத்துடன் குறித்த இரு போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளோர் தமது உடல் நிலை பற்றிய வைத்திய சான்றிதழை கொண்டுவரல் வேண்டும். சைக்கிள் ஓட்ட போட்டியில் முதலிடம் பெறும் ஆண், பெண் இருபாலருக்கும் 50000ரூபா பணப் பரிசுடன் பைசிக்கள் ஒன்றும் மரதனில் முதலிடத்திற்கு 50000பணப்பரிசும் வழங்கப்படவுள்ளது.அத்துடன் அடுத்து வருபவர்களுக்கும் பெறுமதிமானதும் பரிசில்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இன்னும் பல போட்டிகளும் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டிகள் அனைத்திலும் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் மாத்திரமே கலந்து கொள்ள முடியும்.

Sikaram
துரிதபணமாற்றுச்சேவை
Sikaram INTL Gmbh
Heinrich Strasse 120, 8005 Zürich
Tel : 044 2410241
Fax : 044 2410245
sikaramgmbh@gmail.com / www.sikaram.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளில் மூழ்கியுள்ள கிண்ணியா கடல் மேல் பாலம்



[ஹஸ்பர் ஏ ஹலீம்]

திருகோணமலை மாவட்டம் கிண்ணியா கடல் மேல் பாலத்தில் ஊடான பகுதியில் வீதி மின் விளக்குகள் இயங்காமை காரணமாக இருள் சூழ்ந்த பகுதியாக உள்ளது இதனால் அதன் ஊடாக பயணிப்போர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது பல நாட்களாக குறித்த பாலத்தின் இரு மருங்கிலும் உள்ள மின் விளக்குகள் ஒளிர்வதில்லை எனவும் தெரியவருகிறது திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதி என்பதால் நாளாந்தம் நூற்றுக் கணக்கான வாகனங்கள் இதன் ஊடாகவே பயணிக்கிறது கிண்ணியா நகர சபையின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த இப் பால மின் விளக்குகள் தற்போது ஒளிர்வதில்லை. சுமார் 398 மீற்றர் தூரம் கொண்ட குறித்த பாலமானது இருள் சூழ்ந்த பகுதியாக காணப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

# அக்கரைப்பற்று அசெம்பிளி ஒப் கோட் தேவசபையில் நினைவேந்தல் நிகழ்வு

[வி.சுகிர்தகுமார்]

ஏப்ரல் 21 இல் நடைபெற்ற ஈஸ்டர் தாக்குதலின் இரண்டாவது வருட நினைவாக இடம்பெற்ற ஒன்றிணைந்த பிரார்த்தனை மற்றும் நினைவேந்தல் நிகழ்வு அக்கரைப்பற்று அசெம்பிளி ஒப் கோட் தேவசபையில் நேற்று நடைபெற்றது.

மனித நேயத்தை அனைவரும் பின்பற்றுவோம் எனும் தொனிப்பொருளில் அம்பாரை மாவட்ட பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஒன்றிணைந்த பிரார்த்தனை மற்றும் நினைவேந்தல் நிகழ்வு பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தின் தலைவி சைமன் வாணி மற்றும் திட்ட இணைப்பாளர் வாணி திட்ட உத்தியோகத்தர் சுமந்தி உள்ளிட்டவர்களின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்றது.

மதத்தலைவர்களின் நினைவேந்தல் உரை மற்றும் மத அனுஸ்டானங்களுடன் ஆரம்பமான நிகழ்வில் இடம்பெற்ற மனிதநேயமற்ற செயற்பாடுகள் தொடர்பிலும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.



மேலும் நமது நாட்டில் இதுபோன்ற துரதிஸ்ட சம்பவங்கள் இடம்பெறாது பாதுகாக்க அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் வலியுறுத்தப்பட்டது.

தொடர்ந்து ஈஸ்டர் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தி வேண்டிய பிரார்த்தனைகள் நடைபெற்றதுடன் மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வுகளில் சர்வமத தலைவர்கள் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# பதிவாளர் மகேந்திரராஜா 75வயதில் ஓய்வு!

[சகா]



அம்பாறை மாவட்டத்தின் காரைதீவுப் பதிவாளர் பிரிவின் பிறப்பு இறப்புப் பதிவாளரும் நிந்தவூர்ப்பற்றுப் பிரிவின் பொதுவிவாகப் பதிவாளருமான தம்பிராஜா மகேந்திரராஜா தனது 75ஆவது வயதில் ஓய்வுபெற்றுள்ளார்.

பதிவாளர் நாயகத்தினால் அம்பாறை மாவட்டச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் காரைதீவுப்பிரதேச செயலாளர் இவரது ஓய்வு தொடர்பாக அறிவித்துள்ளார்.

06.04.2021 இல் 75ஆவது வயதை பூர்த்திசெய்வதால் இவ் ஓய்வு அறிவிக்கப்படுவதாக பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் தெரிவித்துள்ளார்.

மேலும் இதுவரை காலமும் பதிவாளர் நாயகத்திற்கும் காரைதீவுப் பிரதேசத்திற்கும் ஆற்றிய பெறுமதிமிக்க சேவைக்காகப் நன்றியுடன் பாராட்டுகிறோம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காரைதீவைச்சேர்ந்த ஓய்வுநிலைஅதிபர் வே.தம்பிராஜா க.தங்கநாயகம் தம்பதிகளின் சிரேஸ்டபுதல்வனான பதிவாளர் தம்பிராஜா மகேந்திரராஜா சிவானந்தாவித்தியாலய பழையமாணவனும் நீண்டகாலம் சிவானந்தா விடுதியின் மேற்பார்வையாளராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆற்றுமணல் அகழ்வுக் கொள்ளையில் கோழி திண்ட கள்ளனும் கூட நின்று நியாயம் கேட்கும் நாடகங்களே அரங்கேறுகிறது!

## மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்!

[தாஸன்]

இயற்கை வளம் அழிவதற்கும் மண் வளத்தை வெளிநாடுகளுக்கு விற்பதற்கும் பின்னணியில் இருப்பவர்கள் அரசாங்கத்தை ஆதரிக்கும் அரசியல்வாதிகளே அன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் இல்லை என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சி பட்டிருப்புத் தொகுதித் தலைவரும் ஊடக செயலாளருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் மண் அகழ்வுக் கொள்ளை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அநேக இடங்களில் பல்வேறுபட்டவர்கள் மண் அகழ்வில் ஈடுபடுவதை காணமுடிகிறது. இதில் வேடிக்கை என்னவென்றால் மண்ணை வெளி மாவட்டங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்பவர்களே அதை தடுப்பது போன்று நாடகமும் ஆடுகின்றனர். இதை கரிசனையுடன் தடுக்க வேண்டும் என முயற்சிப்பது தமிழ்தேசிய கூட்டமைப்பு மட்டுமே வேறு எந்த அரசியல் கட்சிகளும் இதய சுத்தியுடன் செயற்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் சிலர் உறவினர்கள், நண்பர்கள்



ஆதரவாளர்களின் பெயர்களில் மண் அகழ்வுக்கான அத்தாட்சிப்பத்திரங்களை வைத்துள்ளனர். இதற்கு சில அதிகாரிகளும் துணையாய் உள்ளனர். அதிகாரிகளின் உறவினர்கள் சிலருக்கும் மண் ஏற்றுவதற்கான அனுமதிப்பத்திரம் உள்ளது. இதுதான் உண்மை அவ்வாறாயின் இதனை எப்படி தடுக்கலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்பு கூட்டங்களில் எமது மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், இரா.சாணாக்கியன் ஆகிய இருவர் மட்டுமே எல்லாக் கூட்டங்களிலும் மண் அகழ்வை ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி எதிர்ப்பை தெரிவித்த வேளையில், கன்துடைப்புக்காக மட்டக்களப்பு மாவட்டங்களில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறும் இடங்களில் நேரடியாக சென்று பார்வையிட அந்த கூட்டங்களின்போது முடிவுகள் எடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட அரச தரப்பு அமைச்சர், அபிவிருத்திக்குழு தலைவருடன் எமது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் களப்பயணங்களை மேற்கொண்டனர். இதில் வேடிக்கை என்னவெனில் ஆற்றுமணல் அகழ்வுக் கொள்ளையில் கோழி திண்ட கள்ளனும் கூட நின்று நியாயம் கேட்பது போன்ற நாடகங்களே அரங்கேறுகிறது. ஆனால் மண் அகழ்வை முழுமையாக தடுக்க முடியவில்லை.

கடந்த வாரம் பாராளுமன்றத்திலும் இந்த விடயம் சம்பந்தமாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றியது மட்டுமன்றி, இரா. சாணாக்கியன் ஜனாதிபதி மாண்புமிகு கோட்டபாயவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்பட்டும் எந்த ஆரோக்கியமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மண் அனுமதிப்பத்திரம் வைத்துள்ளவர்களின் வங்கி கணக்கிற்கு மண்ணை வெளி மாவட்டத்திற்கு ஏற்றிச்செல்லும் பெரும்பான்மை இனத்தை சேர்ந்த வியாபாரிகள் ஒவ்வொரு மாதமும் பணத்தை வைப்பிலிடுவதாகவும் சிலரிடம் நேரடியாக பணத்தை கொடுப்பதாகவும் அதில் சில அரசியல்வாதிகளுக்கு பங்குப்பணம் செலுத்தப்படுவதாகவும் பரவலாக மட்டக்களப்பில் அளவளாவப்படுகிறது. இதில் உண்மையில்லாமல் இல்லை.

ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் தொடக்கம் சில அதிகாரிகள், மட்டக்களப்பு மண் வெளி மாவட்டங்களுக்கு கடத்தப்படுவதற்கு மூல காரணமாக உள்ளதால் இந்த மண் அபகரிப்பை தடுக்க முடியாது. கிழக்கை மீட்பதாக கூறி கடந்த பொதுத்தேர்தலில் பிரசாரம் செய்து தற்போது பதவியில் உள்ளவர்கள் பொதுத்தேர்தல் நிறைவுற்று ஏழு மாதங்கள் கடந்த நிலையில், மாடுகள் மேய்க்கும் கிரான், வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவை சேர்ந்த மேய்ச்சல் தரைக் காணிகள், மயிலத்தமடு தொடக்கம் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் உள்ள கெவிளியாமடு வரையுள்ள ஏறக்குறைய ஆறாயிரம் ஏக்கர் நிலங்கள் அபகரிக்கப்பட்டு, வெளி மாவட்டங்களை சேர்ந்த பெரும்பான்மை மக்களை குடியேற்றி காடழிப்பு செய்து சேனைபயிர்களும், முந்திரி செய்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

இது நில அபகரிப்பு என்று தெரிந்தும் சாட்டுக்காவது வாய்திறக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். இதே போலவே மண் அகழ்வு தொடர்கிறது. இதை தடுப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவுமில்லை. ஆனால் தமிழ்தேசிய கூட்டமைப்பு மட்டுமே இந்த இரண்டு விடயங்களையும் தடுக்கும் முயற்சிகளை எடுத்துள்ளது என்பதை பொதுமக்கள் நன்கு விளங்கி கொள்ளவேண்டும். நாம் அபிவிருத்தியை எப்போதும் தடுப்பவர்கள் இல்லை அதனை ஆதரிப்பவர்கள் ஆனால் நிலம் பறிபோவதையும், மண் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டு எமது வளம் சூறையாடப்படுவதையும் தமிழ்தேசிய கூட்டமைப்பு வாய்மூடி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டாது எனவும் மேலும் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சாய்ந்தமருதில் பள்ளிவாசல் தலைவர்கள் இமாம்களுடனான கலந்துரையாடல்

தற்கால கொவிட் 19 நோய்ப் பாதுகாப்பு விடயங்கள் மற்றும் அதற்கான நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பாக சாய்ந்தமருது ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகத்தின் கீழுள்ள அனைத்துப்பள்ளிவாசல் தலைவர்கள் மற்றும் இமாம்களுடனான விஷேட கலந்துரையாடலொன்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். அல்அமீன் றிஸாத் தலைமையில் நடைபெற்ற இவ் விஷேட நிகழ்வில், சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினரும் கலந்துகொண்டு கொரோனா தொற்றில் இருந்து பாதுகாப்பதற்கான பல வழிகாட்டல்களையும் அறிவுறுத்தல்களையும் இதன்போது வழங்கினர்.



## பாதிப்படைந்த அனைவருக்கும் நீதி கிடைக்கப்பெற வேண்டும்

மக்களுக்காகவும் அமையப்பெற வேண்டும். அன்று மறைந்த மன்னார் ஆயர் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நீதி கோரி ஐ.நா வை நாடியபோது நகையாடியவர்கள் இன்று அவர்களே அவ்வழியையே தெரிவு செய்கின்றனர் என மன்னார் மறைமாவட்ட மனித உரிமை ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற மிலேச்சத்தனமான குண்டு தாக்குதலில் இறந்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று புதன்கிழமை மன்னார் மறைமாவட்டத்தின் வேதசாட்சிகளின் ஆலயத்தில் இவ் நினைவேந்தல் கூட்டுத்திருப்பலியின்போது மன்னார் மறைமாவட்ட மனிதஉரிமை ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் ஆற்றிய மறையுரையில் தொடர்ந்து தெரிவிக்கையில்;

உயிர்த்த ஞாயிறு அன்று மிலேச்சத்தனமான குண்டுதாக்குதலில் உயிர்நீத்தவர்களை நாம் இன்று நினைவுகூர்ந்து அவர்களின் ஆன்மசாந்திக்காக இறைவனிடம் வேண்டியவர்களாக இங்கு ஒன்றுகூடியுள்ளோம். உயிர்த்த ஞாயிறு அன்று இலங்கையின் பல இடங்களில் ஒரே நேரத்தில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்றன என்பது நமக்கு தெரிந்த விடயமாகும்.

தென்பகுதியில் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இறந்தவர்களின் தொகை சுமார் 115, கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தில் இறந்தவர்களின் தொகை சுமார் 50 பேர், மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் ஏறக்குறைய 30 பேர் அதுவும் சிறுவர்களே இங்கு அதிகமாக இறந்தவர்கள். இவற்றைவிட உல்லாச விடுதிகளிலே இறந்தவர்கள் சுமார் 6% பேர். இவ்வாறு மொத்தமாக இவ் தாக்குதல்களில் இறந்தவர்கள் 260 க்கு மேலாகும். அத்துடன் காயமடைந்தவர்கள் இதைவிட அதிகமானவர்களாகும்.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகையின் முன்னெடுப்பினாலே இவ் தாக்குதல் தொடர்பாக பல கோணங்களில் விசாரனைகள் முன்னெடுக்கப்பட்டன.

பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டு விசாரனைகளும் இடம்பெற்றன. இடைக்கால அறிக்கைகள் சமர்பிக்கப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டது. அந்நேரம் இருந்த ஜனாதிபதி. பிரதமர் மற்றும் பொலிசார் இவ் சம்பவம் தொடர்பான தேடுதலில் ஈடுபட்டனர்.

இவ் சம்பவம் நடைபெற்று இரண்டு நாளைக்குள் இதைச் செய்தவர்கள் யார் என்று இனம் காட்டப்பட்டது. அதுவும் முஸ்லீம் பயங்கரவாதிகளாலேயே இது இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டபோதும் இதற்கு யார் காரணம் இதன் பின்னனியில் யார் என்பது இன்னும் எமக்கு வெளிப்படுத்தப்படவில்லை.

இந்த சம்பவத்தில் இறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் பத்து லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இவற்றைவிட கொழும்பு மறைமாவட்டத்தில் இவ் சம்பவத்தில் இறந்தவர்களின் குடும்பங்களை நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்து அவர்களுக்கான உதவிகள் மற்றும் அவர்களுக்கு உளவள உதவிகள் என பல வித உதவிகளுக்காக குழுக்கள் நியமிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இரண்டு தேவாலயங்களிலும் இவர்கள் தொடர்பான நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒருவருட நினைவு தினத்தை முன்னிட்டு இவ் நினைவேந்தலை கொழும்பு மறைமாவட்டம் பெரிதாக செய்வதற்கு திட்டமிட்டிருந்தபோதும் கொரோனா காரணமாக அவை நிறைவேற்ற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டது. 1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் நவாலி தேவாலயத்திலே அதிகமான மக்கள் பயத்தின் காரணமாக தஞ்சம் புகுந்திருந்தனர். அப்பொழுது அங்கு விமானம் குண்டு மழை பொழிந்து சுமார்140 பேர் உயிர் இழந்தனர்.

இவ் சம்பவம் நடந்து இருபத்தைந்து வருடங்கள் கடந்துவிட்டது. ஆனால் யார் இந்த குண்டுமழை பொழிந்தது என இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. கொழும்பில் நடந்த சம்பவம் முஸ்லீம் தீவிரவாதிகள் என இரண்டு தினங்களுக்குள் வெளிப்படுத்தப்பட்டபோதும் ஆனால் நவாலி தேவாலயத்தில் குண்டுமழை பொழிந்தவர்கள் யார் என்பது வெளிச்சத்துக்கு வராத விடயமாகவே தொடர்ந்து காணப்படுகின்றது.

ஆனால் இவ்வாறு சம்பவங்களில் இறந்தவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணங்களிலும் நினைவேந்தல் விடயத்திலும் பெரும் வித்தியாசம் காணப்பட்டன. நவாலி தேவாலயத்தில் இறந்தவர்களின் 25 வது நினைவுதினத்தை அனுஷ்டிக்க சென்ற உறவினர்களை அனுஷ்டிக்கவிடாது பாதுகாப்பு படையினர் தடுத்து நிறுத்திய சம்பவமும் இடம்பெற்றன.

ஆனால் இன்று நாம் இந்த நினைவேந்தலை பாதுகாப்புகளுக்கு மத்தியில் நினைவுகூறுகின்றோம். ஆனால் எமது பகுதியில் இவ்வாறு மரணித்தவர்களுக்கு நினைவுகூறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

ஆலயங்கள் தாக்கப்பட்டது கொழும்பில் மட்டுமல்ல வட பகுதியில் பேசாலையிலே ஆலயம் தாக்கப்பட்டது. அங்கு ஒரு தாய் இறந்தாள். 48 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். யாழ் புனித யாகப்பர் கோவில் தாக்கப்பட்டது இவ்வாறு பல கத்தோலிக்க ஆலயங்கள் தாக்கப்பட்டன. அப்பொழுது எமது ஆயர்களும் ஒரு சில குருக்களும் நீதி கேட்டார்கள். ஐக்கிய நாடு சபைக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டது. நமது மறைந்த ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஜனாதிபதி பிரதமர் ஆகியோரிடம் நீதி கேட்டார். ஆனால் எதற்கும் நீதி கிடைக்கப்பெறவில்லை.

ஈற்றில் ஐநாவுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் உள்நாட்டில் எமக்கு நீதி கிடைக்கப்பெறவில்லை. ஆகவே சர்வதேசமே எமக்கு நீதியை பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கை மறைந்த ஆயரால் விடப்பட்டது. அப்பொழுது நமது தற்பொழுதுள்ள பேராயர் தெரிவித்தவை உள்நாட்டுப் பிரச்சனையை வெளிநாட்டுக்கு கொண்டுச் செல்லமுடியாது. ஏனென்றால் நமது மக்களின் புத்திசாலித்தனத்துக்கு அது ஒரு இழுக்காகும் என தெரிவித்திருந்தார்.

ஆனால் இதே ஆயர் அன்மையில் ஒரு அறிக்கை விட்டிருந்தார். அதாவது எங்களுக்கு உள்நாட்டில் நீதி கிடைக்காவிடில் நாங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்குச் செல்வோம் என்று.

## ஈஸ்டர் தாக்குதலின் உண்மைகளை வெளிக்கொண்டு வரும்வரை ஓயமாட்டேன்

பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி நிலைநாட்டப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலுக்கான நீதியைத் தாமதப்படுத்துவது, முழு நாட்டின் பாதுகாப்பையும் ஆபத்தில் விடுவதற்குச்சமமாகும் என்றும் கொழும்பு பேராயர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதலின் இரண்டு வருட நினைவஞ்சலி அனுஷ்டிக்கப்படும் நிலையில், தாக்குதல் சம்பவத்துக்கு எதிராக எந்த ஒருவருக்கும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி, நியாயம் கிடைக்கும் வரை தமது போராட்டம் தொடரும் என்றும் கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## நாட்டில் மீண்டும் அதிகரிக்கும் கொரோனா சுகாதார மேம்பாட்டு பணியகம் எச்சரிக்கை

பணியகம் தெரிவித்துள்ளது.

நோய் பரவலை கட்டுப்படுத்த அனைத்து இலங்கையர்களும் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும் எனவும் சுகாதார மேம்பாட்டு பணியகம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சுகாதார மேம்பாட்டு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த சில நாட்களாக இலங்கையில் இதற்கு முன்னர் அடையாளம் காணப்படாத கொரோனா வைரஸின் மாறுபட்ட திரிபுகள் பதிவாகியுள்ளன.

இது தொடர்பான விஞ்ஞான ரீதியான தரவுகளின் ஆய்வு மற்றும் தகவல்களை கண்டறியும் நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், பொதுமக்களாகிய நாம் அனைவரும், இவ்வாறு தொற்று அதிகரித்து வரும் நிலைமை தொடர்பில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நோய்த்தடுப்பு ஆலோசனைகளை பின்பற்றுவதன் மூலம் நோய் பரவுவதை மிக விரைவாக கட்டுப்படுத்த முடியும் என்பதை நாம் அனைவரும் கடந்த கால அனுபவங்கள் மூலம் அறிந்து வைத்துள்ளோம்.

கைகளை சுத்தமாக வைத்திருத்தல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணுதல், இருமல், தொண்டை வலி அல்லது தடிமன் போன்ற அறிகுறிகள் இருந்தால் மனிதர்கள் அதிகளவில் நடமாடும் இடங்களை தவிர்த்தல் உள்ளிட்ட விடயங்களை கடைப்பிடிப்பதனாது, இதற்கான தடுப்பு நடவடிக்கைகளாகும்.

இதேவேளை, நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 36% பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் கொழும்பில் மாத்திரம் 94 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 9% ஆயிரத்து 472 ஆக பதிவாகியுள்ளது. இதேவேளை, நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 625 ஆக அதிகரித்துள்ளது.

## இலங்கையில் மூவரின் உயிரை பறித்தெடுத்த அஸ்ட்ரா செனிகா தடுப்பூசி

என்று எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, சுகாதார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கியதால் குருதி உறைந்த 6 சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். குருதி உறைதலுக்கும் தடுப்பூசி பாவனைக்கும் இடையே நேரடி தொடர்பு இல்லை என்பதே உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிலைப்பாடாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org